


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 353 | 4 Pages | 19.7.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 353 | 4 பக்கங்கள் | 19.7.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை உடைமை**
**மயலாகும் மற்றும் பெயர்த்து**

**விளக்கம்:**
**தவம் செய்தவற்கு ஒரு பற்றும் இல்லாதிருத்தல் இயல்பாகும், பற்று உடையவராக இருத்தல் மீண்டும் மயங்குவதற்கு வழியாகும்.**

## தொடர் கனமழை: அமர்நாத் யாத்திரை தற்காலிக நிறுத்தம்



ஜம்மு காஷ்மீர், ஜூலை 19

பனிமலைகள் சூழ்ந்த காஷ்மீர் அமர்நாத் குகைக்கோவிலில் இயற்கையாக உருவாகும் பனிலிங்கத்தை தரிசிக்க கடும்சிரமத்துக்குமத்தியில் ஒவ்வொரு ஆண்டும் பக்தர்கள் பாதயாத்திரையாக வருகின்றனர். இந்த ஆண்டு அமர்நாத் யாத்திரை கடந்த 2ந் தேதி தொடங்கியது. அடுத்த மாதம் (ஆகஸ்டு) 9ந் தேதி வரை 38 நாட்கள் யாத்திரை நடைபெற இருக்கிறது. பால்டால் பாதை, பஹல்காம் பாதை வழியாக பக்தர்கள் அமர்நாத் யாத்திரை செல்கின்றனர். இதுவரை 2½ லட்சம் பக்தர்கள் 3 ஆயிரத்து 880 மீட்டர் உயரத்தில் உள்ள பனிலிங்கத்தை தரிசித்து உள்ளனர்.

இந்நிலையில் காஷ்மீரின் சில பகுதிகளில் கடந்த 2 நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பால்டால் பாதையில் ஏற்பட்ட நிலச்சரிவில் ஒரு பெண் பக்தர் உயிரிழந்தார்.

இதனிடையே காஷ்மீரின் சில பகுதிகளில் 2 நாட்கள் கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்து உள்ளது. இதைத்தொடர்ந்து அடிப்படை முகாம்களில் இருந்து பஹல்காம், பால்டால் வழியாக செல்லும் அமர்நாத் யாத்திரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு ஜம்முவில் இருந்து யாத்திரை நிறுத்தப்பட்டது இதுவே முதல் முறை ஆகும்.

## அனைத்து கல்லூரிகளிலும் கண்காணிப்பு கேமரா கட்டாயமாக்குகிறது கர்நாடகா

பெங்களூரு, ஜூலை 19

கர்நாடகத்தில் உள்ள என்ஜினீயரிங் கல்லூரிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவதை கட்டாயப்படுத்தி உயர் கல்வித்துறை சமீபத்தில் உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த நிலையில், மாநிலத்தில் உள்ள பாலிடெக்னிக் உள்பட அனைத்து கல்லூரிகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவதை கட்டாயமாக்கி உயர் கல்வித்துறை உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் கல்லூரிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து ஆய்வு நடத்தி வருகிற 21ந்தேதிக்குள் அறிக்கை வழங்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பெங்களூரு உள்பட மாநிலத்தில் உள்ள பல கல்லூரிகளில் மாணவர்கள் போதைப்பொருட்கள் பயன்படுத்துவதாகவும், சில கல்லூரிகளில் ராக்கிங் நடப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது. இதுபோன்ற சட்டவிரோத செயல்கள் கல்லூரிகளில் நடப்பதை தடுக்கவும், மாணவமாணவிகளை தீவிரமாக கண்காணிக்கும் விதமாகவும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவது கட்டாயமாக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

## பீகாருக்கு புதிய முதல்மந்திரி வருவார்: பிரசாந்த் கிஷோர்



பாட்னா, ஜூலை 19

பீகார் முதல்மந்திரி நிதிஷ்குமார் அவருடைய சமூக வலைதளத்தில் வெளியிட்ட செய்தியில், மக்கள்பயன்பெறும்வகையில் மின்நுகர்வில் புதியதிட்டம்ஒன்றைஅறிவித்துள்ளேன். வீடுகளில்பயன்படுத்தப்படும் மின்சாரம் 125 யூனிட் வரை எவ்வித கட்டணமும் செலுத்த தேவையில்லை.

வரும் ஆகஸ்டு 1 முதல் உடனடியாக அமலுக்கு வருகிறது. இதன்மூலம் 1. 67 கோடி பேர் பயன்பெறுவர். சூரியசக்தி மின்சார திட்டமும் மேலும் பரவலாக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதற்கு மானியம் வழங்கப்படும். ஏழை குடும்பங்களுக்கு இலவச சூரிய மின் உற்பத்தி உபகரணங்களும் வழங்கப்படும்.

இது மின் நெருக்கடியை குறைக்க உதவும். அனைத்து மக்களும் எளிய மின்சாரம் பெற வேண்டும் என்பதே எங்களின் நோக்கம் என அவர் தெரிவித்து உள்ளார்.

இதுபற்றி ஜன்சுராஜ் கட்சி நிறுவனர் மற்றும் தேர்தல் வியூக நிபுணரான பிரசாந்த் கிஷோர் செய்தியாளர்களிடம் இன்று கூறும்போது, 20 ஆண்டு கால ஆட்சியில் அவருடைய வாக்குறுதிகள் நீண்டகாலம் நம்பத்தக்க ஒன்றாக இருந்தது இல்லை.

பீகாரில் சட்டசபை தேர்தல் வரவுள்ள சூழலில், 125 யூனிட் இலவச மின்சாரம் என அவர் அறிவித்து இருக்கிறார். இதனை நம்ப ஒருவரும் தயாராக இல்லை என கூறியுள்ளார். பீகாருக்கு புதிய முதல்மந்திரி வருவார். நிதிஷ்குமார் சென்று விடுவார் என்றும் கூறியுள்ளார்.

# 2.5 கோடி பேரை திமுக உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் பாஜ, அதிமுக இழைத்த அநீதியை வீடு, வீடாக எடுத்து சொல்லுங்கள்: திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜூலை 19

அடுத்த 30 நாட்களில் தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் சேர்த்து 2.5 கோடி பேரைதிமுகஉறுப்பினர்களாகசேர்க்க வேண்டும். தமிழ்நாட்டுக்கு பாஜ, அதிமுக இழைத்த அநீதியை வீடு வீடாக மக்களிடம் எடுத்து சொல்லுங்கள் என்று மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். தமிழக சட்டப்பேரவைக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கு இன்னும் சில மாதங்களே உள்ளதால் அனைத்து அரசியல் கட்சிகளும் தயாராகி வருகின்றன.

இந்நிலையில் திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் காணொலி வாயிலாக நேற்று நடந்தது. இக்கூட்டத்தில் 76 மாவட்ட செயலாளர்கள், மாநகர செயலாளர்கள் இணைந்திருந்தனர். இக்கூட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை எவ்வாறு நடக்கிறது, தற்போதைய நிலவரம் என்ன? என்று மாவட்ட செயலாளர்களிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார். பின்னர், முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

தமிழ்நாட்டோட மண்மொழிமானம் காக்கவும், நம்மோட திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி தமிழ்நாட்டு மக்களை ஓரணியில் கொண்டுவர வீடு, வீடாக போய் பரப்புரை மேற்கொள்ளவும், திமுகவில் அவர்களை உறுப்பினர்களாக சேர்க்கவும், ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பை கடந்த 3ம் தேதி தொடங்கினோம். தமிழ்நாட்டு மக்களை ஓரணியில் கொண்டுவர மக்களைத் தேடி வீடு வீடாகச் செல்கிறோம் என்பது மகிழ்ச்சி.

செல்லும் இடங்களில் எல்லாம் மக்களின் வரவேற்பு நன்றாக உள்ளது என கேள்விப்படும் போது கூடுதல் மகிழ்ச்சியாக உள்ளது. ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் உழைக்கும் ஒவ்வொரு திமுக உடன்பிறப்புக்கும் என் தலை தாழ்ந்த வணக்கம்; நன்றி! நமக்கு இன்னமும் 30 நாள் இருக்கு. எண்ணிக்கைக்கு நாம் கொடுக்கும் அதே அளவு முக்கியத்துவத்தை ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் 10 நிமிடங்களாவது நம் திமுவினர் கலந்துரையாடுவதை நாம் உறுதி செய்திட வேண்டும்.



ஒன்றிய பாஜ அரசு, அதன் கூட்டணியாக இயங்கிக் கொண்டிருக்கும் அதிமுக உள்ளிட்ட கட்சிகள், தமிழ்நாட்டுக்கு இழைத்துள்ள, இழைக்கவுள்ள அநீதியை வீடு வீடாக ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் எடுத்து சொல்வதுதான் இந்த முன்னெடுப்பின் நோக்கம். அடுத்த 30 நாட்களில் தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் சேர்த்து 2.5 கோடி பேரை திமுக உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும்.

நாம் உருவாக்கியிருக்க 'பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள்' திமுகவின் மிகப் பெரிய சொத்து. அவர்களை எதிர்வரும் சட்டன்றத் தேர்தலுக்கும், தேர்தலை கடந்தும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது வரை இணைக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் விவரங்கள் முழுமையாக ஆய்வு செய்யப்படுகிறது. எந்தெந்த வாக்குச்சாவடிகளில் நாம் வழங்கிய நடைமுறையை சரியாக கடைபிடிக்கவில்லை எனில் அங்கெல்லாம் மீண்டும் முதலில் இருந்து தொடங்குவோம். இவ்வாறு அவர் பேசினார்.

★ 'ஓரணியில் தமிழ்நாடு' என கைகோர்க்கும் குடும்பங்கள்

முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதள பதிவில் கூறியிருப்பதாவது: உறவென விருந்தோம்பல் வழங்கி, ஓரணியில் தமிழ்நாடு எனக் கைகோர்க்கும் குடும்பங்கள்! "எனது கணவர் மாற்றுக்கட்சியில் கிளைச் செயலாளர். அவரை தவிர எங்கள் குடும்பத்தில் உள்ள எல்லோரையும் திமுகவில் இணைத்துக் கொள்கிறோம்" என கரூர் மாவட்டத்தில் நிகழ்ந்தது, தமிழ்நாட்டின் உணர்வாகி, உடன்பிறப்புகள் பெருக வேண்டும் என மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தினேன். இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

## புதுகட்டிடம் தான் வேண்டும் என்று அங்கன்வாடி மற்றும் பள்ளி குழந்தைகளை வகுப்பிற்கு அனுப்பாமல் பெற்றோர்கள் போராட்டம்




திண்டுக்கல் ரெட்டியார்சத்திரம் அருகே உள்ள அழகுபட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு கட்டிடம் கட்டித் தர கிராம சபை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி பல்வேறு முறை மனுக்கொடுத்தும் நடவடிக்கை எடுக்காததால் பொதுமக்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்

அப்போது அங்கு வந்த அதிகாரிகள் ஆஸ்பெட்டாஸ் சீட்டு மட்டுமே மாற்றித்தர முடியும் என்று கூறி விட்டு சென்று விட்டனர் இந்நிலையில் பழைய ஓடுகளை பிரித்து விட்டு தகரகொட்டகை அமைக்க வாகனத்தில் கொண்டு வந்தவர்களை தடுத்து எங்களுக்கு கட்டிடம் தான் வேண்டும் ஆஸ்பட்டாஸ் சீட் வேண்டாம் எடுத்துச் செல்லுங்கள் என்று கூறி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்

மேலும் இதுகுறித்து உடனடியாக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கா விட்டால் இன்று முதல் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர் காலை 10.30 மணியை கடந்தும் எந்த அதிகாரியும் பேச்சுவார்த்தைக்கு வராததால் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் அருகே உள்ள அங்கன்வாடிக்கும் குழந்தைகளை அனுப்பாமல் பெற்றோர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்

சுமார் 11 மணி அளவில் அங்கு வந்த வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் இதுவரை கட்டிடம் கேட்டு எங்களுக்கு எந்த கோரிக்கையும் வரவில்லை என்று கூறவே நான்கு முறை கிராமசபை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம் மேற்கொண்டு எதற்கு நாங்கள் தனியாக மனு அளிக்க வேண்டும் என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பினர். ஆட்சியர் மற்றும் அமைச்சர் அவர்களிடம் இது பற்றி நேரடியாக எடுத்து கூறி மனு அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கவே ஆவேசமடைந்த பொதுமக்கள் பிறகு எதற்காக கிராமசபை கூட்டம் என்று ஒன்றை நடத்தி அதில் நடத்தப்படும் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று பொதுமக்களை ஏமாற்றுகிறார்கள் என்று கேள்வி எழுப்பவே அதிர்ந்து போன அதிகாரிகள் உடனடியாக கட்டிடம் கட்டி தருவதாககூறி பள்ளிக்குழந்தைகளை பள்ளிக்கு அழைத்து வர கோரிக்கை விடுக்காமல் அதிகாரிகள் விரைந்து சென்றனர் அந்த பேச்சுவார்த்தை நடத்த வந்த சப் கலெக்டர் அவர்களையும் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் திரும்பச் சொல்ல அறிவுறுத்தியுள்ளார் எனவே இதுவரை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்காத வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சி செயலாளர் பணி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்மே லும் இரண்டு நாட்களுக்குள் உரிய முடிவேடுக்காவிட்டால் திங்கட்கிழமை முதல் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் போராட்டத்தில் ஈடுபட போவதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்

## தாராபுரம் அருகே தனியார் விண்ட் மில் எரிந்து நாசம்: ரூ.80 லட்சம் இழப்பு; பொதுமக்கள் கடும் கவலை காற்றாலை பராமரிப்பு குறைபாடுகள் காரணமா?



திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தை அடுத்த மூன்டு வேளம்பட்டி கிராமத்தில் இன்று ஒரு தனியார் காற்றாலை (விண்ட் மில்) திடீரென தீப்பற்றி எரிந்து மிகப் பெரிய சேதத்தை ஏற்படுத்தியது. தாசர்பட்டி பகுதியில் பூமெக்ஸ் பனியன் நிறுவனத்திற்கு சொந்தமான நிலத்தில் இயங்கிக் கொண்டிருந்த "டெக்சஸ் விண்ட் ஃபார்ம்" காற்றாலை, அதிக காற்றின் வேகத்தால் கட்டுப்பாடின்றி சுழன்றது. இதனால் ஏற்பட்ட உராய்வின் தாக்கத்தில் காற்றாலை திடீரென தீப்பற்றி எரிந்தது. விரைவில் தீ வேகமாக பரவியது. மூன்று இறக்கைகளும் தீயில் கருகி சிதைந்தன. மலமலவென்று எரிந்த காட்சியால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் அங்கும் இங்கும் ஓடினர்.

மேலும், அதிக கரும்புகை வானத்தை நோக்கி எழுந்ததால் அருகிலிருந்த கோழிப் பண்ணை மற்றும் விவசாயிகள் தோட்டத்தில் இருந்த ஆடு, மற்றும் மாடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது. அப்பகுதியில் வசிக்கும் சிலருக்கு மூச்சுத்திணறல், வாந்தி போன்ற உடல் நலக் கேடுகள் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

தகவல் அறிந்த குண்டடம் போலீசார், தீயணைப்பு துறையினருக்கு தகவல் வழங்கினர். அதன்பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, மூன்று மணி நேரம் கடும் முயற்சியால் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்த தீ விபத்தில் சுமார் ரூ.80 லட்சம் மதிப்பிலான விண்ட் ஃபார்ம் உதிரி பாகங்கள் முற்றிலும் சேதமடைந்தன. இதுதொடர்பாக குண்டடம் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், தாராபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 2000க்கும் மேற்பட்ட தனியார் காற்றாலை நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. ஆனால், அவை பெரும்பாலும் முறையான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைபின்பற்றவில்லை எனக் கூறப்படுகிறது.

விண்ட் மில்களில் உள்ள கீர்களை காற்றின் வேகத்திற்கேற்ப மாற்ற வேண்டும். கூடுதலாக, கூலன்ட் ஆயில், கிரீஸ் போன்ற பராமரிப்பு பணிகள் முறையாக நடைபெறாமல் இருப்பதே இவ்வாறான தீவிபத்துகளுக்குக் காரணம் என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். தாராபுரம், பூளவாடி, குடிமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் செயல்படும் அனைத்து தனியார் காற்றாலை நிறுவனங்களும் முறையாக பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்கிறார்களா என்பதை அதிகாரிகள் உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும், இல்லையெனில் இது போன்ற தொடர் விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளது என பொதுமக்கள் எச்சரிக்கி ன்றனர




## திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சாய் வைத்தி யலிங்க சுவாமிகள் திருக்கோவில் நிர்வாகிகளான தம்பதியர் சாய் ஜி.காளிதாஸ் பார்வதி ஆகியோரின் 50வது திருமண நாள் பொன் விழா



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சாய் வைத்தி யலிங்க சுவாமிகள் திருக்கோவில் நிர்வாகிகளான தம்பதியர் சாய் ஜி.காளிதாஸ் பார்வதி ஆகியோரின் 50வது திருமண நாள் பொன் விழா தாராபுரம் அனுமந்தா புரம் இல்லத்தில் நடைபெற்றது.

கல்வியாளர் மற்றும் ஆன்மீக நெறியாளர் டாக்டர் ஜெய்லானி விழாவில் கலந்து கொண்டு பரிசு வழங்கி வாழ்த்தினார். மேலும் தம்பதியர் களிடம் ஆசி பெற்றார். இந்த நிகழ்ச்சியில் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக தொண்டரணி தலைவர் எஸ்.வி.எஸ். சாகுல் ஹமீது, மாவட்ட தொண்டரணி துணை செயலாளர் அப்பாஸ் அலி, நகர தொண்டரணி செயலாளர் எஸ். ஷாஜஹான், ஆதிதிராவிடர் நலக் குழு உறுப்பினர் சிவசங்கர், நல்லாம் பாளையம் ஊராட்சி விஜயகுமார், கவி. முனியப்பன், வாட்டர் முருகேசன், வக்கீல் அசோக் மற்றும் ஏராளமான பக்தர்கள், கழக பிரமுகர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார் கள்

தினகனி



# பாடப்புத்தகத்தில் அக்பர் ஆட்சி கொடூரமானது என சேர்ப்பு மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் என்சிஇஆர்டி: தலைவர்கள் கண்டனம்



சென்னை, ஜூலை 19

மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் என்.சி.இ.ஆர்.டி. 8ம் வகுப்பு புதியபாடத்திட்டத்தில்அக்பர் ஆட்சி கொடூரமானது என சேர்த்திருப்பதற்கு வைகோ மற்றும் ஜவாஹிருல்லா கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.


வைகோ (மதிமுக பொதுச் செயலாளர்): தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்சிஇஆர்டி) 8ம் வகுப்புக்கான புதிய பாடப்புத்தகத்தில். சமூகத்தை ஆராய்தல்; இந்தியா மற்றும் அதற்கு அப்பால் என்ற தலைப்பில் பாடம் இடம்பெற்றுள்ளது. மேலும், பாபர் நகரங்களில் முழு மக்களையும் கொன்றுகுவித்த ஒரு மிருகத்தனமான, இரக்கமற்றவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவுரங்கசீப்கோயில்களையும், குருத்வாராக்களையும் அழித்த ராணுவ ஆட்சியாளர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்பரின் ஆட்சி கொடூரமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்துத்துவ சனாதன சக்திகளின் திட்டப்படி நாட்டின் பன்முகத்தன்மைக்கும், மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் முயற்சிகளுக்கும் என்.சி.இ.ஆர்.டி துணைபோவது கடும் கண்டனத்துக்குரியது. எனவே, உடனடியாக பாடப்புத்தகங்களில் இருந்து இத்தகைய கருத்துக்களை நீக்க வேண்டும்.

நெல்லை முபாரக் (எஸ்டிபிஐ கட்சி மாநில தலைவர்): 202526 கல்வியாண்டிற்காக வெளியிடப்பட்ட 8ம் வகுப்பு சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் முகலாய மன்னர்களான பாபர், அக்பர் மற்றும் அவுரங்கசீப் ஆகியோரை கொள்ளையர்கள் மற்றும் வெளிநாட்டு படையெடுப்பாளர்கள் எனச் சித்தரித்து, அவர்களின் கலாச்சார, நிர்வாக, மற்றும் கட்டிடக்கலை பங்களிப்புகளை முற்றிலுமாக நீக்கி, இந்தியாவின் பன்முக வரலாற்றை வேண்டுமென்றே திரித்து எழுதப்பட்டுள்ளது.

2020ம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த திருத்தங்கள், கல்வியைக் காவிமயமாக்குவதற்கான பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக தோன்றுகின்றன. இத்தகைய செயல்கள் மாணவர்களிடையே பிளவை உருவாக்குகின்றன. என்சிஇஆர்டி உடனடியாக பாடப்புத்தகங்களை மறுபரிசீலனை செய்து, வரலாற்று ரீதியாக துல்லியமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஆடி மாதப்பிறப்பையொட்டி காவிரிக்கரை சோழீஸ்வரருக்கு 1008 குட தீர்த்த அபிஷேகம்



ஈரோடு, ஜூலை 19

ஆடி மாதப்பிறப்பையொட்டி, ஈரோடு கருங்கல்பாளையம் காவிரிக்கரையில் உள்ள சுந்தரவல்லி உடனுறை சோழீஸ்வரர் கோயிலில், வில்வ லிங்கம் மற்றும் மூலவருக்கு 1008 குடம் தீர்த்த அபிஷேம் நடைபெற்றது. முன்னதாக, காவிரி ஆற்றில் இருந்து கோயில் வரை, வரிசையாக நின்ற 150க்கும் மேற்பட்ட பக்தர்கள், ஆற்றிலிருந்து ஒருவர் கைமாற்றி ஒருவராக, தீர்த்தம் எடுத்துக் கொடுக்க, சிவாச்சாரியார்கள், வில்வ லிங்கம் மற்றும் மூலவருக்கு அபிஷேகம் செய்தனர். தொடர்ந்து, பால், பஞ்சாமிர்தம், தேன், இளநீர், சந்தனம் உள்ளிட்ட பல்வேறு திரவியங்களில் சிறப்பு அபிஷேகமும், மகா தீபாரதனையும் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை உதவி ஆணையர் சுகுமார்(தக்கார்), கோயில் செயல் அலுவலர் திலகவதி மற்றும் அறநிலையத்துறை ஊழியர்கள் மேற்கொண்டனர்.

இதேபோன்று, மாநகரில் உள்ள பெரிய மாரியம்மன், சின்ன மாரியம்மன், காரை வாய்க்கால் மாரியம்மன், சூரம்பட்டி வலசு மாரியம்மன், வீரப்பன்சத்திரம் மாரியம்மன், கருங்கல்பாளையம் மாரியம்மன், கொங்கலம்மன், கள்ளுக்கடை மேடு மாரியம்மன், காவிரிக்கரை கன்னிமார் கருப்பண்ணசாமி கோயில் உள்ளிட்ட அனைத்து கோயில்களிலும் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இதனால், கோயில்களில் இன்று அதிகாலை முதல் பக்தர்கள் கூட்டம் நிறைந்து காணப்பட்டது. நாளை ஆடி முதல் வெள்ளியை முன்னிட்டு, மாநகரில் உள்ள அனைத்து அம்மன் கோயில்களிலும், சிறப்பு பூஜை, அலங்காரம் மற்றும் திருவீதி உலாவிற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# மசினகுடிதெப்பக்காடு சாலையில் கூட்டமாக வலம் வரும் யானைகள்: சுற்றுலா பயணிகள் கண்டுவியப்பு




ஊட்டி, ஜூலை 19

முதுமலை புலிகள் காப்பகம் மசினகுடிதெப்பக்காடு சாலையில் கூட்டமாக வலம் வரும் காட்டு யானைகளை கண்டு சுற்றுலா பயணிகள் வியப்படைந்தனர். நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக மழை பெய்து வருகிறது. இதனால், முதுமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட தெப்பக்காடு, மசினகுடி உட்பட அனைத்து பகுதிகளும் தற்போது பச்சை பசேல் என காட்சியளிக்கிறது. இதனால் முதுமலையில் சாலையோரங்களில் காட்டு யானை, காட்டு மாடுகள், மான்கள் என பல்வேறு விலங்குகளையும் காண முடிகிறது. இவைகள் சாலையோரங்களில் வலம்வருகின்றன. இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்கின்றனர்.

குறிப்பாக, குட்டிகளுடன் கூட்டம் கூட்டமாக வலம் வரும் காட்டு யானைகளை பார்க்க முடிகிறது. இவ்வழியாக மைசூர் உட்பட கர்நாடக மாநிலங்களுக்கு செல்லும் மற்றும் அங்கிருந்து ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் இவைகளை கண்டு ரசித்து செல்கின்றனர். மசினகுடிதெப்பக்காடு சாலையில் தற்போது அடிக்கடி வலம் வரும் காட்டு யானைகள் கூட்டம் சுற்றுலா பயணிகள் கண்களில் அதிகம் தென்படுகிறது. அதனை புகைப்படம் எடுத்து செல்கின்றனர்.

# குரூப் 2 பணிக்கான தேர்வு சான்றிதழ் சரிபார்ப்பு, கலந்தாய்வு வரும் 22ம் தேதி தொடக்கம்: டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு



சென்னை, ஜூலை 19

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) செயலாளர் சுந்தரராஜ்வெளியிட்டஅறிவிப்பு: ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் (குரூப் 2 பணிகள்) தேர்வில் தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அறிவிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள காலிபணியிடங்களை நிரப்புவதற்கான மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு வருகிற 22ம் தேதி முதல் 24ம் தேதி வரை சென்னை பிராட்வேயில் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அலுவலகத்தில் நடைபெற உளளது.

மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் *www.tnpsc.gov.in* வெளியிடப்பட்டுள்ளது. மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான நாள், நேரம் மற்றும் இதர விவரங்கள் அழைப்பாணையினை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான *www.tnpsc.gov.in*லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்படும் தேர்வர்களுக்கு அதற்கான விவரம் குறுஞ்செய்தி (எஸ்எம்எஸ்) மற்றும் மின்னஞ்சல் மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும்.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான அழைப்பாணை தனியே அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது. சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவரும் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்பட்டு தேர்வு செய்யப்படுவார்கள் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது. தேர்வர்கள் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் கலந்துகொள்ள தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பொள்ளாச்சி அருகே மலைப்பாதையில் வேன் கவிழ்ந்து 2 தொழிலாளர்கள் பலி: 20 பேர் படுகாயம்



பொள்ளாச்சி, ஜூலை 19

பொள்ளாச்சி அருகே மலைப்பாதையில் வேன் கவிழ்ந்த விபத்தில் படுகாயமடைந்த 2 தொழிலாளர்கள் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். 20 பேர் படுகாயமடைந்தனர். கோவை மாவட்டம் பொள்ளாச்சி அடுத்த ஆழியார் அருகே உள்ள நவமலை மலைவாழ் மக்கள் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் தொழிலாளர்கள் 22 பேர் இன்று காலை சரக்கு வேனில் கூலி வேலைக்காக காட்டம்பட்டிக்கு புறப்பட்டனர். வால்பாறையில் இருந்து ஆழியார் வரும் மலைபாதையில் வேன் வந்து கொண்டிருந்தது. சின்னார்பதி என்ற பகுதியில் வளைவில் திரும்பும்போது வேன் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து நடுரோட்டில் கவிழ்ந்தது. இதில் வேனுக்கு அடியில் சிக்கி படுகாயமடைந்த திலகராஜ் (40), ராணி (55) ஆகியோர் சம்பவ இடத்தில் பலியாகினர்.

தகவலறிந்த அழியார் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து விபத்தில் படுகாயமடைந்த சந்தோஷ் குமார் (32), தேவகுமார் (25), சந்தோஷ் (18), மதீஷ் (23), மாரிமுத்து (19), வெண்ணிலா (21), காளியம்மாள் (30), தேவபாலா (23), ராசாத்தி (28), காளிமுத்து (17), கன்னியப்பன் (30), சதீஷ் (30), சாந்தி (52), கமலா (65), லாரன்ஸ் (42), சஞ்சய் (20), தண்டபானி (67), மணி (40), மாங்காரு (40) ஆகிய 20 பேரையும் ஆம்புலன்ஸ் மூலம் மீட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். இதில் 3 பேரை மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# இலவசமாக விநியோகம் செய்ய 20 ஆயிரம் சில்வர் ஓக் நாற்றுக்கள் 5 ஆயிரம் சோலை மரக்கன்றுகள்: விவசாயிகளுக்கு நீலகிரி வனத்துறை அழைப்பு



ஊட்டி, ஜூலை 19

இலவசமாக விநியோகம் செய்ய 20 ஆயிரம் சில்வர் ஓக் நாற்றுக்கள், 5 ஆயிரம் சோலை மரக்கன்றுகள் தயார் நிலையில் உள்ளதாக மாவட்ட வனத்துறை சார்பில் விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வனத்துறை, நீலகிரிவனக்கோட்டம், ஊட்டி வடக்கு வனசரகம் சார்பில் மாவட்ட வன அலுவலர் கவுதம் உத்தரவின் பேரில் விவசாயிகளுக்கு நேரடியாக பலன் தரும் மரக்கன்றுகளை வனத்துறை மூலம் இலவசமாக விநியோகம் செய்யப்பட உள்ளது.

இதன்படி 20 ஆயிரம் சில்வர் ஓக் நாற்றுகள், 5 ஆயிரம் சோலை மர நாற்றுகள் (நாவல், விக்கி, கோலி, கிலிஞ்சி, செண்பகம், மேப்பியா) ஆகியவை தயாராக உள்ளது. இவற்றை பெற ஆதார் அட்டை, பட்டா, சிட்டா ஆகியவற்றின் நகல்களுடன் அணுகலாம். நாற்றுகள் தேவைப்படுவோர் வனவர் யோகேஸ்வரன் என்பவரை 6380783251 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். நாற்றங்கால் ஊட்டி வடக்கு வன சரக வளாகம், வி.சி. காலனி, பிங்கர்போஸ்ட் என்ற முகவரியில் அமைந்துள்ளது.

# ரயில் மாறி ஏறியதால் ஏற்பட்ட சோக முடிவு: ம.பி. போலீஸ் சித்ரவதையால் நெல்லையை சேர்ந்தவர் இறந்ததாக புகார்



நெல்லை, ஜூலை 19

நெல்லை மாவட்டம் சுண்டவிளை கிராமத்தைச் சேர்ந்தவர் மாசனமுத்து (44). இவருக்கு மனைவி மற்றும் இரண்டு பெண் குழந்தைகள், ஒரு மகன் உள்ளனர். இவர் குடும்ப சூழ்நிலை காரணமாக சில நாட்களுக்கு முன்பு புனே சென்றுள்ளார். அங்கு அவர் இட்லி கடையில் பணிபுரிந்து வந்துள்ளார். இதையடுத்து அவர் 20 நாட்களுக்கு பின் மீண்டும் சொந்த ஊர் திரும்புவதற்காக மும்பையில் இருந்து ரயிலில் புறப்பட்டுள்ளார். ஆனால், தவறுதலாக பாட்னா விரைவு ரயிலில் ஏறியதால் மத்தியப் பிரதேசத்துக்கு மாசனமுத்து சென்றுள்ளார்.

அங்கு இறங்கிய மாசனமுத்து, மொழி தெரியாமல் மிகவும் சிரமப்பட்டுள்ளார். இதையடுத்து மத்தியப் பிரதேசத்தில் மொழி ஏதும் தெரியாததால் அங்குள்ள போலீசாரின் உதவியை மாசானமுத்து நாடியுள்ளார். மத்தியப் பிரதேசத்தில் தங்கியிருந்த மாசானமுத்துவை சந்தேகத்தின் பேரில் கஞ்ச் பசோடா போலீசார் அழைத்துச் சென்று அடித்து துன்புறுத்தியுள்ளனர். இதையடுத்து காவல்நிலையத்தில் விசாரணையின் போது மாசானமுத்து உயிரிழந்துவிட்டதாக அவரது குடும்பத்தினருக்கு போலீஸ் தகவல் தெரிவித்தது. உயிரிழந்த மாசானமுத்துவின் உடல் தற்போது மத்திய பிரதேச அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மத்தியப் பிரதேசத்தில் போலீசார் அடித்து துன்புறுத்தியதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாசானமுத்து என்பவர் உயிரிழந்தாக புகார் எழுந்துள்ளது. இதையடுத்து மாசானமுத்து மகன் சுஜின் கூறியதாவது; கஞ்ச் பசோடா போலீசாரால் தனது தந்தை உடல்ரீதியாக துன்புறுத்தப்பட்டதில் உயிரிழந்து விட்டார். தனது தந்தையின் உயிரிழப்புக்கு கஞ்ச் பசோடா போலீஸ் பொறுப்பேற்க வேண்டும். தந்தை மாசானமுத்துவின் உடல் பிரேத பரிசோதனை முழுவதையும் வீடியோ பதிவு செய்ய வேண்டும். மேலும், மத்தியப் பிரதேசத்தில் உள்ள மாசானமுத்து உடலை கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

# டிஎஸ்பிக்கு எந்த அழுத்தமும் கொடுக்கவில்லை: எஸ்பி ஸ்டாலின்



மயிலாடுதுறை, ஜூலை 19

கார் விவகாரத்தில் டிஎஸ்பி சுந்தரேசன் கூறிய குற்றச்சாட்டுக்கு மயிலாடுதுறை எஸ்பி ஸ்டாலின் மறுப்பு தெரிவித்துள்ளார். எஸ்பி ஸ்டாலின் உள்ளிட்ட அதிகாரிகள் தன்னை டார்கெட் செய்வதாக டிஎஸ்பி சுந்தரேசன் கூறிய நிலையில் எந்த அதிகாரியும் அழுத்தம் தரவில்லை என மயிலாடுதுறை எஸ்.பி. ஸ்டாலின் விளக்கம் அளித்துள்ளார்.

# ஊட்டி தாவரவியல் பூங்காவில் பூத்துக்குலுங்கும் சிவப்பு நிற சால்வியா மலர்கள்



ஊட்டி, ஜூலை19

ஊட்டி தாவரவியல் பூங்காவில் பூத்துக்குலுங்கும் சிவப்பு நிற சால்வியா மலர்களை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர். ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதம் முதல் சீசன் அனுசரிக்கப்பட்டது. இதற்காக பூங்கா முழுவதிலும் 5 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டன. 35 ஆயிரம் தொட்டிகளில் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு அவை பல வண்ணங்களில் பூத்துக்குலுங்கியது. இதனை பல லட்சம் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்துச் சென்றனர். முதல் சீசன் முடிந்த நிலையில், கடந்த மாதம் பூங்காவில் உள்ள அனைத்து மலர் செடிகளும் அகற்றப்பட்டன. அதேபோல் தொட்டிகளில் உள்ள மலர் செடிகளும் அகற்றப்பட்டது.

இதனால் பூங்காவில் பெரும்பாலான மலர் செடிகளில் தற்போது மலர்கள் இன்றி காட்சியளிக்கின்றன. இந்நிலையில் வருகிற செப்டம்பர் மாதம் துவங்க உள்ள 2வது சீசனுக்காக பூங்கா தயார் செய்யப்பட்டு வருகிறது. இதனால் பூங்காவில் உள்ள பாத்திகள் மற்றும் தொட்டிகளில் மலர்கள் இன்றி காட்சியளிக்கிறது. இருப்பினும், பூங்கா முழுவதிலும் சிவப்பு நிற சால்வியா மலர்கள் பூத்துள்ளன. இந்த மலர் செடிகளை பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் கண்டுரசித்து செல்வதுடன், அதன் அருகே நின்று புகைப்படம் எடுத்துச் செல்கின்றனர். ஊட்டியில் அவ்வப்போது பெய்து வரும் மழையால் பூங்கா புல் மைதானங்கள் பச்சை பசேல் என காட்சியளிக்கின்றன.

# நாட்டுப்புற கலை பயிற்சி மையங்களில் மாணவர் சேர்க்கை



சென்னை, ஜூலை 19

நாட்டுப்புற கலை பயிற்சி மையங்களில் நாளை முதல் மாணவர் சேர்க்கை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்; நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கவும், இளைய தலைமுறையினரிடையே நாட்டுப்புறக் கலைகளை கொண்டு சேர்க்கவும், என அரசின் அறிவிப்பு திட்டத்தினை செயல்படுத்திடும் பொருட்டு, சென்னை, மதுரை, கோயம்புத்தூர்மற்றும்திருவையாறு அரசு இசைக்கல்லூரிகளிலும், சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளிலும், மாமல்லபுரம் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியிலும், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சேலம், கிருஷ்ணகிரி, விழுப்புரம், கடலூர், சீர்காழி, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர், இராமநாதபுரம், சிவகங்கை, ஈரோடு, திருநெல்வேலி,தூத்துக்குடி ஆகிய இடங்களில் செயல்படும் மாவட்ட அரசு இசைப்பள்ளிகளிலும் மற்றும் தஞ்சாவூர் மண்டல கலை பண்பாட்டு மையம் ஆகிய 25 இடங்களில் 2024 2025 ஆம் கல்வியாண்டு முதல் பகுதிநேர நாட்டுப்புறக் கலைப்பயிற்சி மையங்கள் தோற்றுவிக்கப்பட்டு,

கரகம், தப்பாட்டம், மரக்கால் ஆட்டம், சிலம்பாட்டம், கும்மி, துடும்பாட்டம், காவடியாட்டம், ஜிக்காட்டம், இசை நாடகம், பேண்ட் இசை, தோற்பாவைக்கூத்து, தெருக்கூத்து, புலியாட்டம், கைச்சிலம்பாட்டம், பெரிய மேளம், பம்பை, கிராமியப் பாட்டு, புரவியாட்டம், கோல்கால் ஆட்டம், மல்லர் கம்பம், நைண்டி மேள தவில், நாதஸ்வரம், வில்லுப் பாட்டு, பொம்மலாட்டம், சாமியாட்டம், கோலாட்டம், வள்ளிக்கும்மி, தேவராட்டம், ஒயிலாட்டம், கணியான் கூத்து ஆகிய கலைகளில் ஒவ்வொரு இடத்திலும் நான்கு வகையான கலைகளில் ஓராண்டு சான்றிதழ் பயிற்சியாக வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை நாட்டுப்புறக் கலைப் பயிற்சிகள் நடைபெறுகிறது. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தின் இசைவு பெற்று இப்பயிற்சிகள் நடத்தப்படுகிறது. அவ்வகையில் 2025 2026 ஆம் கல்வியாண்டில் பகுதி நேர நாட்டுப்புறக் கலைப்பயிற்சி மையங்களில் மாணவர் சேர்க்கை நாளை முதல் நடைபெறவுள்ளது. 17 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் / தவறியவர்கள் இப்பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவார்கள். நாட்டுப்புறக் கலையில் ஆர்வமிக்க கல்லூரி மாணவர்கள் / இளைஞர்கள் / பணிக்கு செல்பவர்கள் /இல்லத்தரசிகள் ஆகியோர் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு, தமிழ்நாட்டின் பாரம்பரிய நாட்டுப்புறக் கலைகளில் பயிற்சி பெறலாம்.

இப்பயிற்சி குறித்த விவரங்களை யும், பயிற்சியில் சேருவதற்கான விண்ணப்பத்தி னையும் கலை பண்பாட்டுத்துறையின் இணையதளத்தில் (*www.artandculture.tn.gov.in*) இருந்துபதிவிறக்கம்செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடலில் பலத்த காற்று எதிரொலி; சின்ன முட்டம் துறைமுகத்தில் மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை: 350 விசைப்படகுகள் நிறுத்தி வைப்பு

கன்னியாகுமரி, ஜூலை 19

கன்னியாகுமரி கடலில் பலத்த காற்று காரணமாக சின்ன முட்டத்தில் இருந்து மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. இதனால் 350 விசைப்படகுகள் கரைகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கன்னியாகுமரியில் உள்ள சின்ன முட்டம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து தினமும் 350க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு சென்று வருகின்றனர். இந்தநிலையில் கடந்த சில நாட்களாக கடலில் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படுகிறது. இருப்பினும் தங்களது வாழ்வாதாரத்தை கணக்கில் கொண்டு மீனவர்கள் கடலுக்கு சென்று வந்தனர். இதற்கிடையே நேற்று கன்னியாகுமரி கடலில் காற்றின் வேகம் தீவிரமடைந்தது. ஒரு கட்டத்தில் சூறாவளி காற்றாக மாறியது. இதனால் மீனவர்களின் நலன் கருதி மீன்வளத்துறை சார்பில் அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டு உள்ளது.

அதில் கன்னியாகுமரி கடலில் காற்றின் வேகம் அதிகமாக இருக்கிறது. ஆகவே மறுஅறிவிப்பு வரும் வரை மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம். மீனவர்கள் பாதுகாப்பாக விசைப்படகுளை நிறுத்தி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இன்று சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்லவில்லை. இதன் காரணமாக சின்ன முட்டத்தில் சுமார் 350க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரையில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டதால் மீனவர்கள் வலைகளை பராமரிக்கும் பணியை செய்து வருகின்றனர்.

# மதுரை மாநகராட்சி வரி விதிப்பு முறைகேடு விவகாரத்தில் சிபிஐ விசாரணை தேவையில்லை: மூத்த ஐபிஎஸ் அதிகாரி விசாரிக்க ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை, ஜூலை 19
மதுரை மாநகராட்சி வரி விதிப்பு முறைகேடு வழக்கை சிபிஐ விசாரிக்கத் தேவையில்லை எனக் கூறியுள்ள ஐகோர்ட் கிளை, மூத்த ஐபிஎஸ் அதிகாரி விசாரிக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளது. மதுரை மாநகராட்சி 83வது வார்டு அதிமுக கவுன்சிலர் ரவி, ஐகோர்ட் மதுரைகிளையில் தாக்கல் செய்த மனுவில், ''மதுரை மாநகராட்சியில் பல கோடி ரூபாய் மோசடி நடந்துள்ளது. இதில் தமிழ்நாடு காவல் துறை விசாரணை முறையாக நடைபெறாது. சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்'' என்று கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், மரியா கிளெட் ஆகியோர் முன் நேற்று விசாரணைக்கு வந்தது. கூடுதல் அட்வகேட் ஜெனரல் வீரா கதிரவன் ஆஜராகி, ''இந்த விவகாரத்தில் முறையாக விசாரணை நடந்து வருகிறது. தொடர்புடைய மாநகராட்சி ஊழியர்கள் மீது சஸ்பெண்ட் மற்றும் டிஸ்மிஸ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகவும் நேர்மையான முறையில் போலீசார் விசாரித்து வருகின்றனர். எனவே, சிபிஐ விசாரணைக்கு அவசியம் இல்லை'' என்றார்.

இதையடுத்து நீதிபதிகள், ''மாநகராட்சிவரிவிதிப்பில் முறைகேடு என்பது மதுரையில் மட்டும் நடைபெறுவதில்லை. தமிழ்நாடு முழுவதும் இதுபோல நடைபெறுகிறது. இந்த விவகாரத்தில் ரூ.200 கோடி வரை முறைகேடு நடந்ததாக மனுதாரர் தரப்பில் குற்றம் சாட்டப்படுகிறது. வரி விதிப்பில் முறைகேடு நடந்திருப்பதாக மாநகராட்சி ஆணையரே புகார் அளித்துள்ளார். அவர் 16.9.2024ல் புகார் அளித்துள்ளார். 7 மாதம் தாமதமாக 17.6.2025ல் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த தாமதம் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இந்த முறைகேட்டில் அரசியல் கட்சியை சேர்ந்தவர்களுக்கும் தொடர்பு உள்ளது. இதையடுத்தே மண்டல தலைவர்கள், குழுதலைவர்கள் என 7 பேர் ராஜினாமா செய்துள்ளனர்.

இந்த முறைகேடு தொடர்பான விசாரணை நியாயமாக நடைபெற வேண்டும். முழு உண்மையையும் வெளிக்கொண்டு வர வேண்டும். முறைகேட்டில் தொடர்புடைய அனைவரும் விசாரிக்கப்பட வேண்டும். இதனால் ஐபிஎஸ் அதிகாரி தலைமையில் சிறப்பு விசாரணை குழு அமைத்து விசாரணையை தொடரலாம். ஆனாலும், இந்த விவகாரத்தை பொறுத்தவரை தமிழ்நாடு முதலமைச்சர் தலையிட்டு மண்டலத் தலைவர்கள் மற்றும் நிலைக்குழு தலைவர்கள் உள்ளிட்ட 7 பேரை பதவி விலக உத்தரவிட்டுள்ளார்.



இதன் மூலம் இந்த விசாரணை நேர்மையாக நடைபெறும் என இந்த நீதிமன்றம் நம்புகிறது.

இந்த விவகாரத்தை சிபிஐக்கு மாற்ற வேண்டிய தேவை இல்லை. ஏற்கனவே சிபிஐ வசம் அதிக வழக்குகள் நிலுவையில் உள்ளன. தமிழக காவல் துறையே இந்த வழக்கை விசாரணை செய்தால் போதுமானது. சிபிஐ வசம் ஒப்படைத்தால் விசாரணையை முடிக்க 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகும். எல்லா அதிகாரிகள் மீதும் நம்பிக்கை வைக்காமல் இருப்பது சரியல்ல. சிபிசிஐடி விசாரணையும் தேவையில்லை. இந்த வழக்கை இன்ஸ்பெக்டர் நிலையில் உள்ள அதிகாரிகள் விசாரணை செய்தால் சரியாக இருக்காது என்பதால், தென்மண்டல ஐஜியை இந்த நீதிமன்றம் தாமாக முன்வந்து இந்த வழக்கில் சேர்க்கிறது. அவருடன், மதுரை போலீஸ் கமிஷனர் இணைந்து, மூத்த ஐபிஎஸ் அதிகாரி தலைமையில் சிறப்பு விசாரணை குழு அமைத்து விசாரணையை நேர்மையாக நடத்தி, அறிக்கையை ஜூலை 25ல் ஐகோர்ட் கிளையில் தாக்கல் செய்ய வேண்டும்'' என உத்தரவிட்டு, விசாரணையை தள்ளி வைத்தனர்.

மதுரை மாநகராட்சி வரி வசூல் முறைகேடு தொடர்பாக ஏற்கனவே, மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் செந்தில் குமரன், ஓய்வுபெற்ற உதவி கமிஷனர் ரெங்கராஜன் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டனர். புகாருக்குரிய 350 வரி விதிப்புகள் சார்ந்த பைல்களின் விபரங்கள் நகராட்சி நிர்வாக ஆணையர், துறைச் செயலர் மற்றும் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து தொடர் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதையடுத்து நேற்று மாநகராட்சி மண்டலம் 1ல் பணியாற்றிய கம்ப்யூட்டர் ஆபரேட்டர்களான மதுரையை சேர்ந்த ரவி(56), மண்டலம் 5ல் பணியாற்றிய கருணாகரன்(52) ஆகியோர் கைதாயினர்.

ஏற்கனவே முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூவுக்கு தவறுதலாக இறப்புச் சான்று வழங்கிய வழக்கில் ரவி தொடர்புடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எடப்பாடி பழனிசாமி பிரசாரத்தின்போது பேருந்தை வழிமறித்து அதிமுகவினர் ரகளை: பயணிகள் கொந்தளிப்பு

காட்டுமன்னார்கோவில், ஜூலை 19
கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் பேருந்து நிலையம் முன்பு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, 'மக்களை காப்போம் – தமிழகத்தை மீட்போம்' என்ற பிரசாரத்தில் பேசுவதற்கு நேற்று முன்தினம் இரவு வந்தார். இரவு 9 மணியளவில் தனது பிரசார வாகனத்தில் முக்கிய கடைவீதி வழியாக சென்று பேருந்து நிலையம் முன்பு பேசினார். அப்போது பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் செயல்களில் அதிமுகவினர் ஈடுபட்டனர்.

இதனால் பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட காவல் துறையினர் அவர்களை தடுத்து நிறுத்தி பொதுமக்களுக்கு பாதுகாப்பு தந்தனர். மேலும் பிரசாரம் பேருந்து நிலையம் முன்பு நடைபெற்றதால் வெளியூருக்கு செல்லும் பயணிகள் மிகவும் அவதியடைந்தனர். எடப்பாடி பழனிசாமி தொடர்ந்து ஒரு மணி நேரத்திற்கு மேலாக அங்கு பேசியதால் பேருந்துகள் புறப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால் பயணிகள் மிகவும் சிரமப்பட்டனர்.

இதனை அறிந்த ஓட்டுநர்கள் மாற்று பாதையில் செல்ல பேருந்துகளை இயக்கியபோது அங்கு கூடியிருந்த அதிமுகவினர் ஓட்டுநர்களிடம் ரகளையில் ஈடுபட்டனர். உடனே அங்கு வந்த காவல் துறையினர், சமாதானம் செய்ய முயன்றனர். ஆனால் அதிமுகவினர் ஏற்க மறுத்த நிலையில் அங்கு கூடியிருந்த பொதுமக்கள், வெகுநேரம் காத்திருந்த பயணிகள் அதிமுகவினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. எடப்பாடி பிரசாரத்தை முடித்து சென்றபின் சகஜ நிலை திரும்பியது. இதுகுறித்து பஸ்சில் காத்திருந்த பயணிகள் கூறுகையில், பேருந்து நிலையம் முன்பு பிரசாரத்தை மேற்கொண்டதால் சென்னை மற்றும் பல ஊர்களுக்கு செல்வோர் இரவுநேர தாமதத்தால் செல்ல முடியாத சூழ்நிலை உருவாகியதாக தெரிவித்தனர்.



# வரதட்சணை கொடுமை அதிகரிக்கிறது குடும்ப வன்முறையால் பெண்கள் இறந்ததாக பதிந்த வழக்கு எத்தனை? அறிக்கை தாக்கல் செய்ய ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை, ஜூலை 19
மதுரையைச் சேர்ந்த ஒரு பெண், கணவர் குடும்பத்தினர் துன்புறுத்தலால் கடந்த 2016ல் தற்கொலை செய்து கொண்டார். இந்த வழக்கில் அந்த பெண்ணின் கணவருக்கு 5 ஆண்டு சிறை தண்டனை விதித்து மதுரை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது. இதை எதிர்த்து அவர் ஐகோர்ட் மதுரை கிளையில் மனு செய்தார். இந்த மனுவை நேற்று விசாரித்த நீதிபதி மஞ்சுளா, ஆரோக்கியமான சமுதாயத்தின் அடித்தளம் குடும்பங்கள் தான்.

ஒவ்வொருகுடும்பத்தின் ஆணிவேராக பெண்கள் தான் இருக்கின்றனர். அவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகி தற்கொலை செய்து கொள்வதால் அந்த குடும்பத்தில் உள்ள குழந்தைகள் உட்பட அனைவரும் கடுமையான பாதிப்பை சந்திக்கின்றனர். வரதட்சணை கொடுமை உட்பட பல்வேறு இன்னல்களுக்கு குடும்ப பெண்கள் ஆளாகி வருவது அதிகரிக்கிறது.



இந்த நடைமுறை சமுதாயத்தின் கட்டமைப்பை தகர்ப்பதாக உள்ளது. எனவே அரசுக்கு இதுதொடர்பாக பல்வேறு வழிகாட்டுதல்களை இந்த நீதிமன்றம் வழங்க முடிவு செய்கிறது. ஆகையால், கடந்த 5 ஆண்டுகளில் இது போன்ற குடும்ப வன்முறைகளால் பெண்கள் இறந்தது குறித்து எத்தனை வழக்குகள் தமிழகத்தில் பதிவாகியுள்ளன. அவற்றின் தற்போதைய நிலை என்ன என்பது உள்ளிட்ட விபரங்களை தமிழக அரசு தரப்பில் தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளார்.

# மலைப்பாதையில் வேன் கவிழ்ந்து 3 தொழிலாளர் பலி: 19 பேர் படுகாயம்

பொள்ளாச்சி, ஜூலை 19
கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த ஆழியாரில் இருந்து வால்பாறை செல்லும் வழியில் நவமலை அமைந்துள்ளது. இங்குள்ள மலைவாழ் குடியிருப்புகளில் வசிக்கும் 6 பெண் உள்பட 22 தொழிலாளர்கள் நேற்று காலை சரக்கு வேனில் கூலி வேலைக்காக காட்டம்பட்டி புறப்பட்டனர். வேனை தேவபாலன் (23) ஓட்டினார்.

காலை 8.20 மணி அளவில் கவியருவி அருகே மலைப்பாதையில் சின்னார்பதி என்ற பகுதியில் வளைவில் திரும்பியபோது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து வேன் நடுரோட்டில் கவிழ்ந்தது. இதில், மேல் பகுதியில் நின்றிருந்த தொழிலாளர்கள் வேன் அடியில் சிக்கியும், சாலையில் தூக்கி வீசப்பட்டும் படுகாயமடைந்தனர். காயமடைந்த 20 பேரை பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.



இதில், பலத்த காயமடைந்த சஞ்சய் (20), மணி (40), மங்காரை (40), சாந்தி (52) காளியம்மாள் (30) ஆகிய 5 பேரை மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். அங்கு சஞ்சய் இறந்தார். உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா ரூ.3 லட்சமும், படுகாயமடைந்தவர்களுக்கு ரூ.1 லட்சமும், லேசான காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் நிவாரணம் வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

# உள்ளாட்சி அமைப்புகளில் நியமன பதவி மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பிக்க அவகாசம்

சென்னை, ஜூலை 19
தமிழ்நாடு அரசு வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின், தமிழ்நாடு சட்டம் திருத்தப்பட்டவாறான பிரிவின்படி மாற்றுத்திறனாளி நபர்களிடமிருந்து பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி மன்றங்களில் உறுப்பினராக நியமனம் செய்யப்படுவதற்கு கடந்த 1ம் தேதி முதல் நேற்று வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன.

இதனிடையே, மாற்றுத்திறனாளி நபர்களிடமிருந்தும் அவர்கள் தொடர்புடைய பொது நல சங்கங்களிடமிருந்தும் விண்ணப்பம் செய்ய நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளை (17ம் தேதி) நீட்டித்து வழங்கும்படி வரப்பெற்ற கோரிக்கைகளை பரிசீலித்து வரும் 31ம் தேதி வரை கால நீட்டிப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் வசித்து வரும் தகுதியான மாற்றுத்திறனாளிகள், ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கைகளின் படி தொடர்புடைய பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆணையரிடம் வரும் 31ம் தேதி மாலை 3 மணி வரை விண்ணப்பம் செய்யலாம்.



# கார் டயர் வெடித்து தாய், தந்தை, மகன் பலி

ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணத்தை சேர்ந்தவர் வெங்கடேசன் (55), கார் மெக்கானிக். இவரது மனைவி லதா(46), இவர்கள் மகன் தினேசுடன் (19), அகரம் தட்சிணாமூர்த்தி கோயிலுக்கு சென்றுவிட்டு காஞ்சிபுரம் வழியாக நேற்று காலை திரும்பி கொண்டிருந்தனர். காரை தினேஷ் ஓட்டினார்.

காஞ்சிபுரம் அரக்கோணம் சாலை நெமிலி அடுத்த சேந்தமங்கலம் கிராமம் அருகே வந்தபோது திடீரென டயர் வெடித்து, கட்டுப்பாட்டை இழந்த கார், எதிரே வந்த டேங்கர் லாரி மீது மோதியது. இதில் லதா சம்பவ இடத்திலும், மற்ற இருவரும் சென்னை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு கொண்டு செல்லும் வழியிலும் இறந்தனர்.



# பொதுஇடத்தில் கொடிக்கம்பம் அகற்றுவதை எதிர்த்து வழக்கு 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வு முடிவெடுக்கும்; ஐகோர்ட் தனி நீதிபதி தகவல்

சென்னை, ஜூலை 19
தமிழகம் முழுவதும் பொது இடங்கள், தேசிய, மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான இடங்களில் அரசியல் கட்சிகள், சாதி, மத அமைப்புகள் மற்றும் சங்கங்களின் கொடிக்கம்பங்கள் உள்ளன. இதனை அகற்ற உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து, தமிழக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை கூடுதல் தலைமை செயலர், அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் கடந்த 15ம் தேதி ஒரு உத்தரவை பிறப்பித்தார்.

அதில், தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து கொடிக்கம்பங்களையும் ஜூலை 18ம் தேதிக்குள் அகற்ற வேண்டும் என அறிவுறுத்தியிருந்தார். தமிழக அரசின் இந்த உத்தரவை எதிர்த்து சிபிஎம் மாநில செயலாளர் பெ.சண்முகம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 'கொடிக்கம்பங்களை அகற்ற எதிர்ப்பு தெரிவித்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமைத்துள்ளார்.




அதுவரை கொடிக்கம்பங்களை அகற்றக்கூடாது என்று தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும்,'என்று கோரினார். அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, 'இந்த விவகாரத்தில் மேற்கொண்டு எதுவும் நடந்து விடாது. 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வு இது குறித்து முடிவெடுக்கும்,' என்று கூறி விசாரணையை ஆகஸ்ட் 18ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

# சாதி அடிப்படையில் கோயிலுக்குள் நுழைவதை தடுத்தால் வழக்கு: காவல்துறைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஜூலை 19
சாதி அடிப்படையில் கோயிலுக்குள் நுழைவதை எவரேனும் தடுத்தால் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்றத்தில் வெங்கடேசன் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் தாலுகா, புதுக்குடி எனும் கிராமத்தில் உள்ள அய்யனார் கோயிலில் பட்டியல் இனத்தவர்களால் நிறுவப்பட்ட சிலைகளை ஒரு பிரிவினர் இடித்து தள்ளி விட்டனர்.

கோயிலில் அமைக்கப்பட்டுள்ள பெரிய இரும்பு கதவுக்கு பின்பு இருந்துதான் சுவாமி தரிசனம் செய்ய பட்டியல் இனத்தவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஜூலை 16ம் தேதி முதல் 31ம் தேதி வரை நடைபெற உள்ள தேர் திருவிழாவில் பட்டியல் இனத்தவர்கள் பங்கேற்கவும், கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கவும் உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், சட்டத்தின் ஆட்சி நடக்கும் நாட்டில் சாதி ரீதியான பாகுபாட்டை அனுமதிக்க முடியாது.



புதுக்குடி அய்யனார் கோயிலுக்கு பட்டியலின மக்கள் செல்வதை யாரும் தடுக்கவில்லை என்பதை அரியலூர் மாவட்ட எஸ்பி உறுதி செய்ய வேண்டும். கோயிலில் அனைத்து தரப்பு மக்களும் தரிசனம் செய்வதையும், விழாக்களில் பங்கேற்பதையும் அவர் உறுதி செய்ய வேண்டும். பல்வேறு தலைவர்களின் நீண்ட போராட்டத்துக்குப் பிறகு ஆலய நுழைவுச் சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டத்தை அமல்படுத்த வேண்டியது அதிகாரிகளின் கடமை. சாதி அடிப்படையில் கோயிலுக்குள் நுழைவதை எவரேனும் தடுத்தால் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர வேண்டும் என்று உத்தரவிட்டார்.

# பள்ளிபாளையத்தில் மீண்டும் தொழிலாளர்களிடம் கிட்னி திருட்டு: மருத்துவ அதிகாரி விசாரணை

பள்ளிபாளையம், ஜூலை 19
பள்ளிபாளையத்தில் தொழிலாளர்களிடம் கிட்னி திருட்டு தொடர்பாக மீண்டும் எழுந்துள்ள புகார்கள் தொடர்பாக, மாவட்ட மருத்துவ துறை இணை இயக்குனர் விசாரணை மேற்கொண்டார். நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம், விசைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதி. இங்கு கடந்த 30 ஆண்டுகளாக தொழிலாளர்களிடம் கிட்னி திருடுவதாக பிரச்னைகள் கிளம்பி வருகிறது. பிரபல மருத்துவமனைகளில் கிட்னி மாற்று அறுவை சிகிச்சைக்காக, தற்போது ரூ.15 லட்சம் வரை கட்டணம் வாங்கப்படுகிறது.

இதில் கிட்னி தானம் செய்பவர்களுக்கு, ரூ.10 லட்சம் வரை வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. பண நெருக்கடியில் சிக்கியுள்ள பலரும், தனியார் மருத்துவமனையில் தங்களது ஒரு சிறுநீரகத்தை தானமாக வழங்கி விட்டு, அதற்கான தொகையை பெற்று வருகின்றனர். ஒரு முறை கிட்னி வழங்குவோர், தமக்கு தெரிந்த சிலரையும் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று, கிட்னியை தானம் செய்ய வைக்கின்றனர்.

இவர்கள் பல ஆண்டுகளாக இதுபோல் புரோக்கர்களாக செயல்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. மருத்துவமனையில் இவர்களுக்கு தனியாக கமிஷன் வழங்கப்படுகிறது. புரோக்கர்கள் பலர் போலியான ஆவணங்களை தயார் செய்து, தானம் வழங்குவோரை மருத்துவமனை நிர்வாகத்திற்கு அறிமுகப்படுத்துகின்றனர். ஆவணங்களை சரி பார்க்கும் மருத்துவமனை நிர்வாகத்தினர், கிட்னி தேவைப்படும் நோயாளிகளையும், தானம் செய்வோர்களையும் ஒரே நாளில் அழைத்து, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்கின்றனர்.

கடந்த சில நாட்களாக, பள்ளிபாளையம் கோரக்காட்டுவலசு பகுதியில், ஒருவர் கிட்னி விற்பனை செய்தால் ரூ.10 லட்சம் வரை பணம் கிடைக்குமென ஏழைத்தொழிலாளர்களிடம் ஆசைவார்த்தை கூறி அழைப்பதாக, சமூக வலைதளங்களில் புகார் கிளம்பியது. இதையடுத்துநாமக்கல்மாவட்ட சுகாதாரத் துறை இணை இயக்குனர் ராஜ்மோகன், நேற்று பள்ளிபாளையம் வந்தார். அவர் பிரச்னைக்குரிய புரோக்கர் வீட்டிற்கு சென்று விசாரணை மேற்கொண்டார். புரோக்கரின் வீடு பூட்டியிருந்ததால், அருகில் உள்ள வீட்டை சேர்ந்தவர்களிடம் அவர் விசாரணை மேற்கொண்டு, விவரங்களை பதிவு செய்தார். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

மதுரை, திருப்பாலையில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நேற்று மாலைநடந்தநிகழ்ச்சியில் 31 மருத்துவ கட்டிடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத் துறைஅமைச்சர்பி.மூர்த்தி ஆகியோர் திறந்து வைத்தனர்.

பின்னர் அமைச்சர் மா.சுப்ரமணியன் அளித்த பேட்டியில், உடல்உறுப்பு தானம் என்பது மனிதநேய நடவடிக்கை. அதை விற்பனை செய்வது மனிதநேயமற்ற செயல். அதை செய்பவர்கள் கண்டிப்பாக தண்டிக்கப்படுவார்கள். அது கடும் குற்றம். அவ்வகையில், நாமக்கல் விவகாரம் தொடர்பாக உரிய விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குற்றவாளிகள் தப்பவே முடியாது என்றார்.

# ஓட்டுநர், நடத்துனர் பணியிடங்களுக்கு 27ம் தேதி எழுத்து தேர்வு

சென்னை, ஜூலை 19
தமிழகத்தில் உள்ள 8 போக்குவரத்து கழகங்களின் கோட்டங்கள் மூலமாக தினசரி 22 ஆயிரத்திற்க்கும் மேற்பட்ட பேருந்துகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கான ஓட்டுநர்கள் – நடத்துனர்களுக்கான காலி பணியிடங்கள் அதிமுக ஆட்சி காலத்தில் நிரப்பப்படாமல் இருந்தன.

இந்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான புதிய ஆட்சி பொறுப்பேற்றவுடன் விரைவு போக்குவரத்து கழகங்களில் 685 பணியிடங்கள் நிரப்பப்பட்டதுடன் கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கான பணிநியமனமும் வழங்கப்பட்டன. இதையடுத்து 3,274 ஓட்டுநருடன் நடத்துனர் (டிசிசி) பணியிடங்களுக்கு www.arasubus.tn.gov.in என்ற இணையதளம் மூலம் கடந்த மார்ச் மாதம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன.

அதன்படி, மாநகர போக்குவரத்து கழகத்தில் 364, விரைவு போக்குவரத்து கழகத்தில் 318, விழுப்புரம் கோட்டத்தில் 322, கும்பகோணம் கோட்டத்தில் 756, சேலம் கோட்டத்தில் 486, கோவை கோட்டத்தில் 344, மதுரை கோட்டத்தில் 322, திருநெல்வேலி கோட்டத்தில் 362 ஆகிய பணியிடங்களுக்கான இடத்தை நிரப்பும் பொருட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டு ஏப்ரல் 21ம் தேதி விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த ஓட்டுநர் – நடத்துனர் பணிக்காக 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ள நிலையில் அவர்களுக்கான எழுத்து தேர்வு வரும் 27ம் தேதி நடைபெற உள்ளது.



இந்த தேர்வுகள் சென்னையில் அண்ணா பல்கலைக்கழக வளாகம் உள்பட தமிழகம் முழுவதும் 15 மையங்களில் நடக்கிறது. இந்த தேர்வு எழுதுவதற்கான நுழைவு சீட்டு (ஹால் டிக்கெட்) வரும் 21ம் தேதி முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த எழுத்து தேர்வுகள் முடிவடைந்த பின்னர், செய்முறை தேர்வுகள் நடைபெறும் எனவும் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

19.7.2025

# போலீஸ் வாகனம் பறிப்பு..? 1 கி.மீ நடந்தே அலுவலகம் சென்ற டிஎஸ்பி: மயிலாடுதுறை காவல்துறை வட்டாரத்தில் பரபரப்பு

மயிலாடுதுறை, ஜூலை 19

போலீஸ் வாகனம் பறிக்கப்பட்டதாக கூறி டிஎஸ்பி நேற்று 1 கி.மீ நடந்தே அலுவலகம் சென்ற சம்பவம் மயிலாடுதுறை காவல்துறை வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மயிலாடுதுறை மாவட்ட மதுவிலக்கு அமலாக்க பிரிவு டிஎஸ்பியாக சுந்தரேசன், கடந்த நவம்பர் முதல் பணியாற்றி வருகிறார். சட்டவிரோத சாராயம், மதுகடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.அனுமதியின்றி செயல்பட்ட 23 டாஸ்மாக் பார்களுக்கு சீல் வைத்துள்ளார். சட்டவிரோத சாராயம் மற்றும் மதுபான கடத்தல்தொடர்பாக1200க்கும் மேற்பட்டவர்கள் மீது வழக்குப்பதிந்து, அவர்களில் 700 பேரை சிறையில் அடைத்துள்ளார். இந்நிலையில்,

முதலமைச்சர் வருகைக்கு முன் அமைச்சர் எஸ்கார்டு செல்வதற்கு டிஎஸ்பி சுந்தரேசனின் வாகனத்தை கேட்டு கொடுக்க மறுத்ததால், அவரை பாதுகாப்பு பணிக்கு வெளியூருக்கு அனுப்பி வைத்த மாவட்ட காவல்துறையினர், மீண்டும் பணிக்கு வந்தவுடன் வாகனத்தை பறித்துக் கொண்டதாக கூறப்படுகிறது. இதனால் டிஎஸ்பி சுந்தரேசன், கடந்த சில நாட்களாக டூவீலரில் பணிக்கு சென்று வந்ததாகவும், அந்த வீடியோ காவல்துறை குரூப்பில் பதிவிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் டிஎஸ்பி சுந்தரேசன் நேற்று தனது வீட்டில் இருந்து ஒரு கி.மீ தூரம் உள்ள மதுவிலக்கு பிரிவு அலுவலகத்திற்கு நடந்தே சென்றார்.



மாநில மனித உரிமை கமிஷனில் டிஎஸ்பியாக பணியாற்றிய சுந்தரேசன், காஞ்சிபுரம் ஓய்வுபெற்ற காவல் ஆய்வாளர் கொலை வழக்கு, பகுஜன் சமாஜ் கட்சி மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு தொடர்பான என்கவுன்டர்களில் விசாரணை அதிகாரியாக இருந்து, காவல்துறையினரின் தவறுகளை அறிக்கையில் சுட்டிக்காட்டியதால் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு இடமாற்றப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

காஞ்சிபுரம் ஓய்வு பெற்ற இன்ஸ்பெக்டர் கஸ்தூரி கொலை வழக்கில் எனது விசாரணை அறிக்கையை மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தி, உயர் அதிகாரிகள் தூண்டுதல்பெயரில்எனது வாகனத்தை எடுத்துக் கொண்டு மனரீதியாக டார்ச்சர் செய்து வருகிறார்கள். நேர்மையான போலீஸ் அதிகாரியான எனக்கு நான்கு மாதம் சம்பளம் வழங்கப்படாத நிலையில் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்துள்ளேன். ஆனால் நான் ஓய்வூதியம் பெறக்கூடாது என்பதற்காக சஸ்பெண்ட் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நான் லஞ்சம் வாங்கியது, நிரூபிக்கப்பட்டால் அலுவலக வாசலிலேயே தூக்கில் தொங்க தயார். எனக்கு எனது உயிர் முக்கியம் இல்லை. ஆனால் எனது குடும்பத்திற்கு உயிர்முக்கியம். வளைந்து செல்லாவிட்டால் ஒடுக்கப்படுவீர்கள் என மாவட்ட எஸ்பி ஸ்டாலின் எனக்கு சைகை காட்டினார். நான் தன்னிச்சையாக பேட்டியளிப்பதால் ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரில் சஸ்பெண்ட் செய்யப்படுவேன். இவ்வாறு அவர் கூறினார்.

இது தொடர்பாக எஸ்பி ஸ்டாலின் கூறும்போது, மதுவிலக்கு அமலாக்கப்பிரிவுடிஎஸ்பி சுந்தரேசனுக்கு 7.4.2025 முதல் (TN 51 G 0817) பதிவெண்கொண்டபொலிரோ வாகனம் அலுவலக பணி மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டது. முக்கிய அலுவலுக்காக கடந்த 11.7.2025ம் தேதி அவர் பயன்படுத்தி வந்த வாகனம் திரும்ப பெறப்பட்டு, மாற்று வாகனமாக (TN 51 G 0616) பதிவெண் கொண்ட பொலிரோ வாகனம் வழங்கப்பட்டது. ஆனால் அவர் வாங்க மறுத்து விட்டார். பின்னர் நேற்று (17ம்தேதி) மீண்டும் ஏற்கனவே பயன்படுத்தி வந்த பொலிரோ வாகனம் வழங்கப்பட்டது. ஆனால் அவர் பழுதாகி இருப்பதாக கூறி வாங்க மறுத்து விட்டார். தனது வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு நடந்து வருவது போன்றும், டிஎஸ்பிக்கு மாவட்ட காவல்துறை சார்பில் வாகனம் வழங்கப்படவில்லை என்றும் ஊடகங்களுக்கு தவறான தகவலை பரப்பி வருகிறார்.

டிஎஸ்பி சுந்தரேசனின் வாகனம் பெறப்பட்டதில் முறையான நடைமுறைகள் கையாளப்பட்டுள்ளது. லஞ்சம் ஊழல் எதுவும் மயிலாடுதுறை மாவட்டத்தில் இல்லை. அவர் தவறாக தெரிவிக்கிறார். சுந்தரேசன் கூறுவது எல்லாம் உண்மை அல்ல. அவர் மீது விசாரணை செய்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# பழநி கோயில் உண்டியலில் 5 கிலோ தங்கம் காணிக்கை



பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் கடந்த 23 நாட்களுக்கான உண்டியல் காணிக்கை எண்ணும் நேற்று நடந்தது. இதில் ரொக்கமாக ரூ.2 கோடியே 81 லட்சத்து 16 ஆயிரத்து 256 கிடைத்தது. இதுதவிர தங்கம் 5,005 கிராம், வெள்ளி 11,438 கிராம், வெளிநாட்டு கரன்சி 1,324 ஆகியவை கிடைத்தன. இம்முறை தான் தங்கம் அதிகளவு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதில் ஒரு கிலோ தங்கக்கட்டிகள் 2, நூறு கிராம் தங்கக்கட்டிகள் 23 போன்றவையும் அடக்கம்.

# பர்வத மலை ஏறிய மாணவன் பலி

கலசபாக்கம், ஜூலை 19

கர்நாடக மாநிலம், பெங்களூரு அடுத்த பெல்லாரி தேவி நகரை சேர்ந்தவர் விஸ்வநாதன் மகன் மனோஜ்குமார்(21). பொறியியல் கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வந்தார். இவர் நண்பர்கள் 3 பேருடன் நேற்று முன்தினம் திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் அருகே பர்வதமலை கோயிலுக்கு சென்றார். மலை மீது ஏறி சுவாமி தரிசனம் செய்து விட்டு மாலை 5.30 மணியளவில் கீழே இறங்கினர். இரவு 7 மணியளவில் மலை அடிவாரத்தில் உள்ள பச்சையம்மன் கோயில் அருகே வந்தபோது மனோஜ்குமார், திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயங்கி விழுந்தார். நண்பர்கள் அவரை மீட்டு கலசபாக்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த டாக்டர்கள், அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

# மதுரை ஆதீனத்துக்கு நிபந்தனை முன்ஜாமீன்

சென்னை, ஜூலை 19

கடந்த மே 2ம் தேதி சைவ சித்தாந்த மாநாட்டில் கலந்து கொள்ள மதுரை ஆதீனம் காரில் வந்தபோது உளுந்தூர்பேட்டை சேலம் ரவுண்டானா பகுதியில் அவரது கார் மீது மற்றொரு கார் மோதி விட்டு நிற்காமல் சென்றுள்ளது. இது குறித்து மாநாட்டில் பேசிய மதுரை ஆதீனம், தன்னை கொலை செய்ய சதி நடந்துள்ளது. இதில் பாகிஸ்தானுக்கும் தொடர்பு இருக்கலாம். காரில் வந்தவர்கள் குல்லா அணிந்திருந்தனர், தாடி வைத்திருந்தனர் என்று கூறியிருந்தார்.

இவரது பேச்சு இரு மதத்தினருக்கு இடையே குழப்பத்தையும், மோதலையும் உருவாக்கும் வகையில் இருப்பதாக கூறி சென்னையை சேர்ந்த வழக்கறிஞர்ராஜேந்திரன் சைபர் க்ரைம் காவல்துறையில் புகார் அளித்தார். அதன்படி, ஆதீனத்துக்கு எதிராக 4 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் முன்ஜாமீன் கோரி மதுரை ஆதீனம் தரப்பில் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நீதிபதி கார்த்திகேயன் முன்பு விசாரணைக்கு வந்தது. அவருக்கு முன்ஜாமின் வழங்க காவல்துறை எதிர்ப்பு தெரிவித்தது.மனுவை விசாரித்த நீதிபதி, மதுரை ஆதீனத்துக்கு நிபந்தனை முன்ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார். நிபந்தனைகள் இன்று தெரியவரும்.

# இன்றைய ராசி பலன்கள் (19.7.2025)

**மேஷம்:** எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். உறவினர்கள் ஆதரவு தருவர். முயற்சிகள் வெற்றி பெறும்.

**ரிஷபம்:** குடும்பத்தில் சிக்கல்கள் தீரும். நிதி நிலை மேம்படும். பயணத்தில் நன்மை.

**மிதுனம்:** புதிய வாய்ப்பு கைகூடும். நண்பர்களிடம் உதவி கிடைக்கும். புத்திசாலித்தனமாக செயல்படவேண்டும்.

**கடகம்:** எதிர்பார்த்த இடத்தில் ஆதாயம். குடும்ப சந்தோஷம். மனநிம்மதி பெருகும்.

**சிம்மம்:** திடீர்செலவுகள்உருவாகலாம். சிக்கனமாக இருங்கள். அலட்சியமாகச் செய்ய வேண்டாம்.

**கன்னி:** தொழில் வளர்ச்சி. முக்கிய நபர்களுடன் சந்திப்பு. சிந்தித்து செயல்பட வேண்டும்.

**துலாம்:** எதிர்பாராத சந்தோஷ செய்தி. நன்மை தரும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி.

**விருச்சிகம்:** வாகன பயணத்தில் கவனம் தேவை. மனஉளைச்சல் கூடும். அமைதியாக இருங்கள்.

**தனுசு:** காரிய வெற்றி. குடும்பத்தில் ஒற்றுமை. பண வரவு சாத்தியம்.

**மகரம்:** பழைய கடன் தீரும். நன்மை தரும் நாள். உறவினர் உதவியால் தீர்வு.

**கும்பம்:** மன உளைச்சல் தீரும். தொழிலில் வெற்றி. புதிய யோசனைகள் உதவியளிக்கும்.

**மீனம்:** முக்கியசந்திப்பு.குடும்பத்தில் மகிழ்ச்சி. பணவசதி கூடும்.

# பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்த அண்ணாமலையார் கோயிலில் ரூ.200 கோடியில் பெருந்திட்ட வரைவு: அமைச்சர் சேகர்பாபு பேட்டி

திருவண்ணாமலை, ஜூலை 19



திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள்தொடர்பாக, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து, திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில், அமைச்சர்கள் எ.வ.வேலு, பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடந்தது. அதில், கலெக்டர் தர்ப்பகராஜ், இந்து சமய அறநிலையத்துறை செயலாளர் மணிவாசகம், ஆணையாளர்□தர், எஸ்பி சுதாகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அளித்த பேட்டி:

அண்ணாமலையார் கோயிலுக்கு பக்தர்கள் வருகை அதிகரித்துள்ளதால் பிரேக் தரிசனம் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. தரிசன நேரத்தையும் நீட்டிக்க முடிவு செய்துள்ளோம். தற்போது தரிசன கட்டணம் ரூ.50 என்பதை ரூ.100ஆக உயர்த்த முடிவு செய்துள்ளோம். கட்டண தரிசன வரிசையில் காத்திருப்போருக்கு கழிப்பிடம், குடிநீர், அமரும் வசதி, கோயில் நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு வசதி செய்யப்படும். ரூ.100 கட்டணத்தில் சுமார் 2 ஆயிரம் பேர் அமரும் வகையில் வசதி செய்யப்படும். பொது தரிசன வரிசையின் நீளம் அதிகரிக்கப்படும்.

பக்தர்கள் தங்குவதற்கான கூடுதல் கட்டிடம் கட்ட ஒப்பந்தம் நிறைவு பெற்றுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கும். அடுத்த 20 ஆண்டுகளுக்கு தேவையான அளவில் கூடுதல் வசதிகளை செய்து தர திட்டமிடப்பட்டு, ரூ.200 கோடி மதிப்பில் பெருந்திட்ட வரைவுக்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டுள்ளன. இந்த ஆண்டு இறுதிக்குள் பணிகள் தொடங்கும். கோயிலுக்குள் செல்போன் பயன்பாட்டை கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆலோசித்து வருகிறோம். வெளி மாநில பக்தர்கள் வருகை அதிகரித்திருப்பதால், அந்த மொழிகளில் அறிவிப்புகள் எழுதப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.


# கட்டப்பா பாகுபலியை கொல்லாமல் இருந்தால்... வைரலாகும் ராணாவின் பதிவு



ராஜமவுலி இயக்கத்தில் பிரபாஸ், ராணா, அனுஷ்கா, தமன்னா, சத்யராஜ் உள்ளிட்டோர் நடிப்பில் கடந்த 2015 ம் ஆண்டு வெளியான 'பாகுபலி' (முதல் பாகம்) திரைப்படம், இந்திய சினிமாவையே திரும்பி பார்க்க வைத்தது. அந்த படம் வெளியான சமயம், 'கட்டப்பா ஏன் பாகுபலியைக் கொன்றார்?' என்ற கேள்வி பெரியளவில் டிரெண்ட் ஆனது. சினிமா பாடல்களில் கூட அந்த வரிகள் இடம்பெற்றன.

'பாகுபலி' படம் வெளியாகி 10 ஆண்டுகள் ஆனதை படக்குழுவினர் கொண்டாடி வருகிறார்கள். இதற்கிடையில் 'பாகுபலி' படத்தின் அதிகாரபூர்வ சமூக வலைதள பக்கத்தில், 'ஒருவேளை கட்டப்பா பாகுபலியைக் கொலை செய்யவில்லை என்றால் என்ன நடந்திருக்கும்?' என கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு, 'நான் கொன்று இருப்பேன்' என ராணா குறிப்பிட்டார். ராணாவின் இந்த பதிவு வைரலாகி வருகிறது.

# பணமோசடி வழக்கு குறித்து நடிகர் நிவின் பாலி விளக்கம்




மலையாள சினிமாவில் முன்னணி நடிகர்களில் ஒருவர் நிவின் பாலி. இவர், நயன்தாராவுடன் இணைந்து 'டியர் ஸ்டூடன்ஸ்' என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படம் விரைவில் வெளியாக உள்ளது. லோகேஷ் கனகராஜ் தயாரிக்கும் 'பென்ஸ்' படத்தில் நிவின் பாலி நடித்துவருகிறார். இவர் ஏற்கனவே நடித்து முடித்த ஏழு கடல் ஏழு மலை, டியர் ஸ்டூடன்ஸ் ஆகிய படங்கள் வெளியீட்டுக்குத் தயாராக இருக்கிறது. மேலும், நடிகர் பகத் பாசில் தயாரிப்பில் 'பெத்லஹம் குடும்ப யூனிட்' என்கிற படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார்.

2022ல் வெளியான 'மஹாவீர்யார்' படத்தின் தோல்வியால் ரூ.95 லட்சம் வழங்குவதுடன், அப்ரித் ஷைன் இயக்கும் 'ஆக்ஷன் ஹீரோ பிஜு பார்ட் 2' படத்தை தயாரிக்க வாய்ப்பு வழங்குவதாக நிவின் பாலி உறுதியளித்திருந்ததாக தயாரிப்பாளர் தரப்பில் கூறப்படுகிறது. இதற்கிடையில் இப்படத்திற்கு முதன்மை தயாரிப்பாளராக இருந்த இயக்குநர் அப்ரித் ஷைன், படத்தின் தயாரிப்பை பி.எஸ் ஷாம்னஸிடம் மாற்றிவிட்டிருக்கிறார். இந்நிலையில் இப்படத்தின் துபாய் விநியோக உரிமையை விற்றதில் நிவின் பாலி, ரூ.2 கோடி வரை பி.எஸ் ஷாம்னஸுக்குத் தெரியாமலே அட்வான்ஸாக வாங்கியிருப்பதாகவும், துபாய் உரிமத்தையும் அவரே வைத்திருப்பதாகவும் தயாரிப்பாளர் பி.எஸ் ஷாம்னஸ் தரப்பில் கூறப்படுகிறது. இதுதொடர்பான வழக்குத் தொடர்ந்திருக்கும் தயாரிப்பாளர் பி.எஸ் ஷாம்னஸ், நிவின் பாலி பணமோசடி செய்திருப்பதாகவும், தயாரிப்பாளரை ஏமாற்றி இருப்பதாகவும் குற்றம்சாட்டியிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்திருக்கும் நடிகர் நிவின் பாலி, "இது தொடர்பான வழக்கு 28.06.2025 முதல் நீதிமன்ற நடுவர் குழு விசாரணையில் இருக்கிறது. இதில் ரகசியத்தன்மையை உறுதி செய்வதற்காக ஒரு தடை உத்தரவு நடைமுறையில் உள்ளது. நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை மதிக்காமல், அந்த வழக்கின்மேல் மேலும் ஒரு புதிய வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. இதுதொடர்பாக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவிருக்கிறோம். உண்மை கூடிய விரைவில் வெளிவரும்" என்று கடிதம் ஒன்றை வெளியிட்டிருக்கிறார் நிவின் பாலி.

# வெற்றி மாறனின் "பேட் கேர்ள்" படத்தின் 'நான் தனி பிழை' பாடல் வெளியீடு

காக்கா முட்டை, விசாரணை, வட சென்னை உள்ளிட்ட பல விருதுகளை வென்ற படங்களைத் தயாரித்துள்ள இயக்குனர் வெற்றி மாறனின் கிராஸ் ரூட் பிலிம் கம்பெனி தயாரிப்பில் அறிமுக இயக்குனர் வர்ஷா பரத் இயக்கத்தில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'பேட் கேர்ள்'.

இப்படத்தில் அஞ்சலி சிவராமன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இவருடன் சாந்தி பிரியா, சரண்யா ரவிச்சந்திரன், ஹ்ரிது ஹரூன், டீஜே, சஷங்க் பொம்மிரெட்டிபல்லி மற்றும் பலர் நடித்துள்ளனர். படத்தின் இசையை அமித் திரிவேதி மேற்கொண்டுள்ளார். இப்படம் ஒரு டீனேஜ் பெண் வளர்ந்து வரும் சூழலில் அவளுக்கு ஏற்படும் ஆசைகள், கனவுகள், இச்சைகள் அவள் எப்படி இந்த உலகத்தை பார்க்கிறாள், அனுபவிக்கிறாள் என்பதை பற்றி இப்படம் பேசியுள்ளது. இப்படத்தின் டீசர் வெளியானதில் இருந்து இப்படம் பல சர்ச்சைகளை சந்தித்து வருகிறது. கோவாவில் நடைபெற்ற 54வது சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டு விருது வென்றது குறிப்பிடத்தக்கது. திரைப்படத்தின் முதல் பாடலான "பிளீஸ் என்ன அப்படி பாக்காதே" பாடல் வெளியாகி வைரலானது. இந்நிலையில் இப்படத்தின் இரண்டாம் பாடலான 'நான் தனி பிழை' வெளியாகியுள்ளது.

# 4வது டெஸ்ட்: ஜஸ்பிரித் பும்ரா விளையாடுவாரா..? இந்திய துணை பயிற்சியாளர் பதில்




இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம்மேற்கொண்டு5போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 3 போட்டிகளின் முடிவில் இந்திய அணி 12 என்ற கணக்கில் பின்தங்கி உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் மோதும் 4வது போட்டி வரும் 23ம் தேதி மான்செஸ்டரில் தொடங்க உள்ளது.

தொடரை வெல்லும் வாய்ப்பில் நீடிக்க இந்த 4வது டெஸ்டில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற நெருக்கடிக்குள் இந்திய அணி தள்ளப்பட்டுள்ளது.

இதனிடையே இந்த மிக முக்கியமான போட்டியில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா விளையாடுவாரா? என்பதில் பெரிய கேள்வி நிலவுகிறது. ஏனெனில் இந்த தொடரின் 3 போட்டிகளில் மட்டுமே பும்ரா விளையாடுவார் என்று முன்னதாகவே தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே முதல் மற்றும் 3வது போட்டிகளில் அவர் விளையாடி விட்டதால் மீதமுள்ள 2 போட்டிகளில் எந்த ஒன்றில் விளையாடுவார் என்பது குறித்து ரசிகர்கள் மத்தியில் கேள்வியில் நிலவுகிறது.

இந்நிலையில் இங்கிலாந்துக்கு எதிரான 4வது டெஸ்டில் பும்ரா விளையாடுவார் என்று இந்திய துணை பயிற்சியாளர் ரியான் டென் டோஸ்கேட் தகவல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "கடைசி இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஒன்றிற்கு அவரை (பும்ரா) தேர்வு செய்ய வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். தொடர் இப்போது நெருங்கி வருவது தெளிவாகத் தெரிகிறது. எனவே நாங்கள் மான்செஸ்டரில் (4வது போட்டி) அந்த முடிவை (பும்ரா விளையாடுவது) எடுப்போம்" என்று கூறினார்.



# உள்ளூர் கிரிக்கெட்: அணி மாறிய ஜிதேஷ் சர்மா

இந்திய கிரிக்கெட் வீரரான ஜிதேஷ் ஷர்மா உள்ளூர் போட்டிகளில் விதர்பா அணிக்காக விளையாடி வந்தார். கடந்த ஆண்டு நடைபெற்ற ரஞ்சி கோப்பை தொடரில் அவருக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை. இதனால் அவர் அதிருப்தியுடன் காணப்பட்டார்.

இந்தநிலையில்ஜிதேஷ் ஷர்மாஎதிர்வரும் ரஞ்சி சீசனில் விதர்பாஅணியில் இருந்து விலகி பரோடா அணிக்காக விளையாட உள்ளார்.

விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான ஜிதேஷ் சர்மா இந்திய அணிக்காக 9 டி20 போட்டிகளிலும் விளையாடி உள்ளார். அத்துடன் அண்மையில் முடிவடைந்த ஐ.பி.எல். தொடரில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி கோப்பையை வெல்வதில் முக்கிய பங்கு வகித்தார்.

# ஜப்பான் ஓபன் பேட்மிண்டன்: 2வது சுற்றில் லக்ஷயா சென் தோல்வி

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டி டோக்கியோவில் நடந்து வருகிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய இளம் வீரர் லக்ஷயா சென், ஜப்பானை சேர்ந்த கோடை நரோகா உடன் மோதினார்.



பரபரப்பாக நடைபெற்ற இந்த மோதலில் லக்ஷயா சென் 1921 மற்றும் 1121 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.